UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12-19
PERIODICALS DIVISION
LIBRARY

# போலந்து: சோவியத்யூனியன் முற்றுகையிடும்?

பக்கங்கள் 8

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

மலர் 22 காா்த்திகை 24 முஹர்றம் 30 இதழ் 300
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9 - 12 - 80

## தயார்நிலையில் இருப்பதாக அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், டிச. 8

போலந்தை முற்றுகையிடுவதற்குத் தேவையான சகல ஆயுதங்களையும் சோவியத் யூனியன் செய்துள்ளதென்று அமெரிக்கா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

உத்தரவிடும் பட்சத்தில் உடனடியாக போலந்தை முற்றுகையிடுவதற்குத் தயாராக தமது துருப்புக்களை சோவியத் யூனியன் எல்லையில் நிறுத்தி வைத்துள்ளதென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தமது உயர் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைகளின்போதேமேற்கண்டவாறு கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

போலந்தை முற்றுகையிடுவதற்கு வேண்டிய சகலஏற்பாடுகளையும் ரஷ்யா பூர்த்திசெய்துள்ளபோதிலும் போலந்து விவகாரத்தில் சோவியத்யூனியன் தலையிடக்கூடாதென்றே நாம் விரும்புகிறோமென்றும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினர். (ஓ)

# யாழ். இராணுவ முகாம் 31-ம் திகதியுடன் மூடப்படும்

## இராணுவத்தினர் பலாலி முகாமுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். நகரிலுள்ள இராணுவமுகாம், இம்மாதம் முப்பத்தோராம் திகதியுடன் மூடப்படும்.**

**இம் முகாமிலுள்ள இராணுவத்தினர், பலாலியிலுள்ள இராணுவ முகாமுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள்.**

வடபகுதியில் வன்செயல்களை ஒழித்துக்கட்டும் அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையாக, அவசரகால சட்டத்தின் கீழ், யாழ் நகரில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இந்த இராணுவமுகாம், யாழ், அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் (யாழ் பழைய பூங்காவில்) இடம்பெற்று, இதற்கு இராணுவ இணைப்பு திகாரி அலுவலகம் எனப் பெயரிடப்பட்டது.

இராணுவ இணைப்புஅதிகாரி அலுவலகத்தில், இராணுவத்தினருடன் பொலிசாரும், கூட்டாக இணைந்து செயல்பட்டனர்.

### கூட்டணி கோரிக்கை

யாழ். நகரில் அமைந்துள்ள இராணுவமுகாம்பற்றி பாராளுமன்றத்தில் பலதடவைகள் குரலெழுப்பிய கூட்டணி எம். பிக்கள்: இந்த இராணுவ முகாம் யாழ். மக்களுக்குத் தேவையற்றதொன்று என்றும் இதனை மூடிவிடுமாறும் கோரிக்கை எழுப்பியிருந்தனர்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் கூட, யாழ். இராணுவ முகாம்பற்றி பிரஸ்தாபித்த கூட்டணி எம். பிக்கள்; இம் முகாமை மூடிவிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், வடபகுதியில் இராணுவத்தினரின் சேவை இப்பொழுது அவசியமற்றது என்றும் தெரிவித்து; 'சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்கவே இராணுவத்தினர் வடக்கே வரவழைக்கப்பட்டனர். இப்பொழுது இங்கு வருவோர் யாருமில்லை; இங்கிருந்து வெளியேறுவோர் தொகையே அதிகரித்துள்ளது' என்றும் கூறியிருந்தனர்.

கூட்டணியினரின்கோரிக்கை மீது அரசு தரப்பில் பதில் அளிக்கப்பட்டபோது; யாழ். நகரிலுள்ள இராணுவமுகாமை விரைவில் மூட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், வடபகுதியில் வன்செயல்கள் குறைந்துவிட்டதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 70 ரூபா விசேட படி: ப.நோ. கூ. சங்கம் வழங்கும்

(மாவிட்டபுரம்)

எழுபது ரூபா சம்பளஉயர்வைத் தமது ஊழியர்களுக்கும் வழங்குவதென்று தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் முடிவுசெய்துள்ளது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குநர் சபைக் கூட்டம், தலைவர் திரு. சின்னத்தம்பி சிவமகாராசா தலைமையில் நடைபெற்றபோது, சங்கத்தின் சகலஊழியர்களுக்கும் எழுபதுரூபா விசேடபடி வழங்குவதென்றும் இதனை நவம்பர் மாதத்திலிருந்தே அமுல்செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சம்பள உயர்வு வழங்குவதன்மூலம் மாதந்தோறும் இருபதினாயிரம் ரூபா கூடுதல் செலவு ஆகிறது என்று இயக்குநர் சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## அத்தனகல 'எம். பி.'யான அமிர்தலிங்கம்!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமாகவும், காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றும் திரு அ. அமிர்தலிங்கத்துக்கு, இப்பொழுது புதிய பொறுப்பொன்று சேர்ந்துள்ளது!

அதுதான் அத்தனகல தொகுதி மக்களின் துயர் தீர்க்கும் பொறுப்பு!

அத்தனகல தொகுதியிலிருந்து ஒரு தூதுக்குழு, திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தது. இம்மகஜரில்; 2000 வீடுகளை அமைப்பதற்காக அத்தனகல தொகுதியில் 66 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரித்து விட்டது என்றும், இக்காணிகளில் பரம்பரையாக, பாரம்பரியமான பயிர்ச் செய்கையைத் தாங்கள் செய்துவந்ததாகவும், இவற்றை அழித்து வீடுகள் அமைப்பது, ஒரு பழிவாங்கும் செயலாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டு, இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியிருந்தனர்

இம்மகஜரில் ஐநூற்று அறுபது பேர் கையெழுத்திட்டிருந்தனர். (ம)

## "வீடுகளை அமைத்துக்கொடுக்க சிதம்பரம் காணிகளை அரசு பொறுப்பேற்க வேண்டும்"

### பாராளுமன்றத்தில் தர்மர்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிதம்பரம் கோவிலுக்குச் சொந்தமான காணிகள் பற்றி பாராளுமன்றத்தில் நேற்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் மானிப்பாய் எம் பி திரு வி. தர்மலிங்கம் நேற்று உரையாற்றுகையில் 'யாழ். மாவட்டத்தில் ஏராளமானவர்கள் வீடு இல்லாமல் தவிக்கின்றனர். அங்கு ஏராளமான காணிகள் இருந்தும் இக்காணிகளில் உரிமை கொண்டாடவோ அல்லது சொந்தமாக வாங்கிக்கொள்ளவோ அவர்களுக்கு முடியவில்லை. சிதம்பரம் கோவிலுக்குச் சொந்தமானகாணிகள் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக உண்டு. இக்காணிகளை அரசாங்கம் சுவீகரித்து வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும்'' என்று கூறியபோது பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா குறுக்கிட்டு ''நீங்கள் ஆட்சேபனை கிளப்பமாட்டீர்களா?'' என்று கேட்டார். அதற்கு திரு. தர்மலிங்கம் ''எமக்கு இதில் ஆட்சேபனை கிடையாது'' என்று பதிலளித்தார். (ம)

## கமநல சேவை நிலையங்களுக்கு உழவுயந்திரங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பதின்மூன்று கமநல சேவை நிலையங்களுக்கும் நேற்று மாலை புதிய உழவுயந்திரங்கள் வழங்கப்பட்டன.

புதிய உழவு யந்திரங்களை யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும்: அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி அவ்வப்பகுதி கமநலசேவை நிலையங்களுக்கு வழங்கினார். இதனுடன் யாழ் மாவட்டத்தில் பணியாற்றும் 180 பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்திற்கு யாழ். மாவட்ட கமநல சேவை விரிவாக்க உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் தலைமை வகித்தார்.

ஒவ்வொரு கமநல நிலையமும் புதிய உழவு யந்திரத்தைப் பயன்படுத்தி, இதிலிருந்து பெறப்படும் வருமானத்தில் ஆறுயிரம் ரூபாவை கமநல அமைச்சுக்கு செலுத்தவேண்டும்,

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் தெளிகருவிகளின் பெறுமானவிலை நாலாயிரம் ரூபாவாக இருந்தபோதிலும் தொளாயிரம் ரூபாவுக்கே கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## நாளை நடைபெறும் அமைதிப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமை நடவடிக்கைக் குழுவின் மனித உரிமை நாள் பிரார்த்தனை, நாளைக் காலை, 9 மணிமுதல் 12 மணி வரை துரையப்பா ஸ்டேடியத்திற்கு அருகில் அமைந்துள்ள செல்வா நினைவாலயத்தில் நடைபெறும்.

1979 அவசரகாலச் சட்டத்தின் போது கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கு, பயங்கரவாதச் சட்டத்தை நீக்கு. சன் சோனி ஆணைக்குழு அறிக்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நாவற்குழி கண்டி ரோட்டுக்கு (?)ருகாமையில் கிழக்குப் பக்கமாக, அருணோபக்கறிக்கு முன்னால் ஒவ்வொன்றும் 4 பரப்புக் கொண்ட 8 துண்டுக் காணிகள் விற்பனைக்கு உண்டு. நேர்முகமாக தொடர்பு கொள்ளவும் வே. நடேசன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. 7563

## காணவில்லை

லெட்சுமி என்றழைக்கப்படும் பதின்மூன்று வயது பெண்பிள்ளையை சில தினங்களாக காணவில்லை. வெள்ளை மாநிறம், மயிர் கட்டையாக வெட்டியிருப்பார். மூன்றரை அடி உயரமுள்ளவர். கடைசியாக மஞ்சள் நிற கோடிடப்பட்ட நீளக்கவுண் அணிந்திருந்தார். இவர் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது 315, நாவலர் வீதியிலுள்ள வீட்டுச் சொந்தக்காரருக்கோ தகவல் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 7562

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த தர்மலிங்கம் பெண் பங்கேஸ்வரியின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

காலஞ்சென்றவர்

1. வேலுப்பிள்ளை வைத்திலிங்கமும் பெண்
2. தங்கேஸ்வரியும், மானிடல், காரைநகர்.

மனுதாரர்கள்

வழ. இல. ரி/26

எதிராக

சந்தையா தர்மலிங்கம், வேதரடைப்பு, காரைநகர்.

எதிர் மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்குமேலே பெயர்கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றல் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி.
(ஒப்பம்)
**தா. குலநாயகம்,**
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
**செ. மகேசன்,**
மனுதாரர்களின் சட்டத்தரணி.
4-12-80

எதிர்க்காரணம் காட்டும் திகதி 22-1-81 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**தா. குலநாயகம்,**
7547 பதிவாளர்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இசைமணி ஓய்வு பெற்றார்

(புலோலி)

புலோலி வேலாயுத ஆண்கள் மகாவித்தியாலத்தில் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றிய இசைமணி திரு. ஆ. கார்த்திகேயன் தமது 25 வருடகால ஆசிரிய சேவையின் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார்.

சிறந்த கதாப்பிரசங்கியான இவருக்குக் "கலையரசு" சொர்ணலிங்கம் 1974ம் ஆண்டு முத்தமிழ்மணி என்னும் பட்டமளித்துக் கௌரவித்தார். இசைமன்னன் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அமலம் வஜ்ரவேலு முதலியார் ஆகியோரின் பழைய மாணவரான திரு. கார்த்திகேயன் "கலாநிதிகேதனம்". என்னும் கலாபீடத்தை அமைத்து முத்தமிழையும் வளர்த்து வருகின்றார். (கு)

## பொன்னாலை வரதராசர் நாளை கொடி

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் மார்கழி மாத கொடியேற்ற உற்சவம் நாளை புதன்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இம்மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை பகல் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை திருவடிநிலையில் தீர்த்தமும் நடைபெற்று சுவாமி மஞ்சத்தில் பவனிவரும் காட்சியும் இடம் பெறும். (கு)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்தில் கழட்டப்பெற்ற மணிக்கூட்டைத் திருத்துவதற்கும், திரும்பவும் அம் மணிக்கூட்டை மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தி இயங்க வைப்பதற்குமான கேள்விகள் 23-12-80-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மணிக்கூடு உற்பத்தி செய்வதிலும் திருத்துவதிலும் திறமையுள்ளவர்கள் தங்கள் திறமையை நிரூபிப்பதின் பேரில் கேள்விப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம். மணிக்கூட்டுக் கோபுர வேலைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-ம், மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தியதின்பேரில் 22-12-1980-ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி வரை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்விப் படிவங்கள் மீது கேள்விகள் இரு பிரதிகளில் "மணிக்கூடு திருத்தம்" என எழுதப்பெற்று அரக்குமுத்திரை இடப்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் இரு வார காலத்தில் வேலையை முடித்துப் பாரம் தரல் வேண்டும்.

மணிக்கூட்டுக் கோபுரத்தில் கழட்டப்பெற்ற மணிக்கூட்டை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். மேலதிக விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

**க. சிவஞானம்,**
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
(5-12-80. 7564

# "கல்விச் செல்வத்தை பெறச் செய்வதுபெற்றோரின்கடமை"

## யாழ். எம். பி. உரை

(நெடுங்கேணி)

"கட்டிடங்களை அமைப்பிப்பதோடு நின்றுவிடாது உங்கள் பிள்ளைகளின் கல்வியிலும் அக்கறைகாட்டி அவர்கள் கல்விச் செல்வத்தை தடையின்றிப் பெறச்செய்வது பெற்றோர்களாகிய உங்களின் தலையாய கடமை"

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் நெடுங்கேணி அகதிகள் புனர்வாழ்வுக்கென அமைக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலையை நேற்றுக்காலை திறந்துவைத்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இக்கல்விக் கூடத்தை எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைத்து முடித்துள்ளோம்.

அதனை அமைக்க எஸ். டி. தியாகராஜா ஆற்றிய பணியையும் நாம் நினைவுகூர வேண்டும். அவர் மட்டுமல்ல இக்கட்டிடத்தை அமைக்க அரும்பாடுபட்ட ஒவ்வொருவருக்கும் தமிழ் மக்கள் தனியான பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். இம் மாமை நடாத்தும் அன்பர்களுள் ஒருவராகிய 'பேபி' இக்கட்டிடத்தை அமைக்க அல்லும் பகலும் பாடுபட்ட விதம் எனக்குத் தெரியும். இவ்விதமாகப் பலரது பெருமுயற்சியால் அமைக்கப்படும் இக்கல்விக்கூடத்துக்கு உங்கள் பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பி அவர்கள் கல்வியில் வளரச் செய்வது பெற்றோர்களாகிய உங்கள் கடமை என்றார்.

திரு. எஸ். டி. தியாகராசா மற்றும் காந்தியம் பிரமுகர்கள் கிறிஸ்தவ சகோதரிகள் உட்படப்பலர் இவ் வைபவத்தில் பங்குபற்றினர். முத்தமிழ் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (கி-ன)

## கைகலப்பில் 12 பேருக்கு 'றிமான்ட்'

(மன்னார்)

மன்னார் பனங்கட்டிக் கொட்டு என்ற பகுதியில் வாழும் மக்களிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து மன்னார் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதிபதி திரு. மடவல முன்னர் ஆஜர் செய்யப்பட்ட 12 பேர்களை நீதிபதி எதிர்வரும் 19-ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கைகலப்பில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர்களில் 6 பெண்களுட்பட ஏழு பேர் ஆயிரம்ரூபா ஆள் பிணையில் விடப்பட்டு இம்மாதம் 19-ம் திகதி கோட்டுக்குச் சமுகம் கொடுக்கும்படியும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அரியாலை நி.)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற என். தம்பையா தம்பியப்பாஎன்பவரின் மரணச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல. ரி/3567

துரைராஜா சந்திரசீலன், கரம்பன் கிழக்கு. தற்போது கோல்ஸர்ன் வீதி, 15,2000 கம்பேர்க் 50, மேற்கு ஜேர்மனி. இவரின் அற்றோணித் தத்துவகாரன் கரம்பன் கிழக்கைச் சேர்ந்த முத்தையா பத்மநாதன் மூலம்

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனநியாயாதிக்கவழக்குமேலேபெயர்குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மாசி மாதம் 6-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதி.

ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.
யாழ். மாவட்ட நீதிமன்றம்

வரைதல்;
ஒப்பம்
**செ. மகேசன்,**
மனுதாரரின் சட்டத்தரணி.
7546

## சங்கக்கடையில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

இரவுவேளையில் சங்கக்கடையின் மேற்கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் 6000 ரூபா பெறுமதிமிக்க துணி வகைகளைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் சில்லாலையில் நடைபெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க சில்லாலைக்கிளையில் நடைபெற்ற இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு டி. ஏச். பிரேமதாசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணை நடத்தியது

சங்கக்கடையின் காவலாளி சந்தேகத்தின்பேரில் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார். தொடர்ந்து பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### மற்றுமொரு கடையில்

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்க பனிப்புலம் கிளையிலும் இரவு வேளையில் ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் பால்மா ரின்கள் மற்றும் பல பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதுபற்றி சங்கானைப்பொலிசில் செய்யப்பட்ட புகாரையடுத்து பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர். (சி)

## நுளம்புத்தொல்லை

(மன்னார்)

மன்னாரில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது.

மன்னார் மலேரியாத் தடுப்பு இயக்கம் இம்முறை மன்னார் பகுதியில் நுளம்பு மருந்து அடிக்கவில்லையென்றும், இதன் காரணமாகவே மன்னாரில் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(மன்னார்)

தாராபுரம் (?) சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த ஒரு மாத காலமாக மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி நோயாளிகள் 5 மைல் தூரத்திலுள்ள முருங்கன் அரசினர் வைத்தியசாலைக்குச் சென்றே மருந்துகளை எடுத்து வருகின்றனர். (க)

## மானிப்பாய் கி. ச. விசேட ஆணையாளர்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராம சபை விசேட ஆணையாளராக யாழ். திட்டமிடல் அமுலாக்க பிரதிப் பணிப்பாளர் திரு எஸ். சிவதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பிரதி செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் கிராமசபை அலுவலகத்தில் பிரசன்னமாக இருந்து வரியிறுப்பாளர்களை நேரில் சந்திப்பார். (கு)

## முன்னாள் தலைவர் படம்

(திருகோணமலை)

திருகோணமலையில் சிறந்த தனவந்தரும், சமூக சேவையாளராக இருந்து பணியாற்றி நகராட்சி மன்றத்தின் சிறந்த நிர்வாகஸ்தர் என பலராலும் பாராட்டப்பட்டதுடன் தனது சொந்தப் பணத்திலேயே நகரசபையின் தேவையை பூர்த்தி செய்த முன்னாள் நகராட்சிக் கழகத் தலைவர் திரு மு. தாமோதரம்பிள்ளையின்படம்நகராட்சி மன்றத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உயர்கல்வி பற சீனு பயணம் (?).



(யாழ்ப்பாணம்)

பொறியியலாளர் திரு. கார்த்திகேசு சிவநேசன் பொறியியல் துறையில் எம். எஸ் ஸீ. செய்வதற்காக மீண்டும் சீனு சென்றுள்ளார்.

சீனப்புலமைப்பரிசில் பெற்று சீனாவில் நான்கு ஆண்டுகள் இயந்திரவியல், உற்பத்திப் பொறியியல் துறையில் 4 ஆண்டுகள் கல்விகற்றுப் பட்டம் பெற்று அண்மையில் நாடு திரும்பிய திரு. சிவநேசன் மீண்டும் சீனாவில் உள்ள 'குவின் ஹுவா' சர்வகலாசாலையில் எம். எஸ். ஸி பட்டம் பெறுவதற்கே சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தினதும், மத்திய கல்லூரியினதும் பழைய மாணவரான இவர் முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர் வை. கார்த்திகேசு தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

## சிறப்பிதழ் வெளியீடு

(சுழிபுரம்)

சமயப்பணியாளர் சைவமணி வித்துவான் மு. சபாரத்தினத்தின் பணியைச் சிறப்பிக்கும் நிலையக்குரல் சிறப்பிதழ் வெளியீடு நாளை 10-ம் தேதி வழக்கம்பரையில் நடைபெறவுள்ளது. மலேயன் பென்சனர் திரு. மு. தாமோதரம்பிள்ளை சிறப்பிதழை வெளியிட்டுவைப்பார். (க)

## கிறிஸ்து அரசர் பெருநாள்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கதிரை மாதா ஆலய திரு இருதய பக்திச் சபையினரால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் கிறிஸ்து அரசர் பெருநாள் உற்சவம் அண்மையில் மூன்று தினங்கள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் அதிபரின் இந்திய விஜயம்

# பயனுள்ள பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்

## 100 பேர் குழுவில் அங்கம் வகிப்பர்

புதுடில்லி, டிச. 8

இந்தியாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் சோவியத் அதிபர் திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவ் இரு தரப்பு வர்த்தகம், பொருளாதார உறவு சர்வதேச பிரச்னைகள் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடனும் மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

திரு. பிரஷ்னேவ் முதலில் ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டியைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

### குழுவில் 100 பேர்

திரு. பிரஷ்னேவுடன் வெளிநாட்டு அமைச்சர் திரு. குரோமிக்கோவும் முதலாவது துணைப் பிரதமரும் இந்தியா வந்துள்ளனர். திரு. பிரஷ்னேவுடன் வந்துள்ள குழுவில் 100 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

திரு. பிரஷ்னேவ் இந்தியாவில் தங்கியிருக்கும் நாட்களில் இரு நாடுகளுக்குமிடையிலான மிக முக்கிய சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமென இந்திய அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (இ)

தமிழகத்தில்

# பெரிய மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும்

## எம். ஜி. ஆர். தகவல்

சென்னை, டிச. 8

மேற்கே செல்லும் நதிகளை தமிழகத்திற்குத் திருப்பிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாம் மத்திய அரசிடம் கோரிக்கைவிடுக்கப்போவதாக தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழகத்திலுள்ள பெரிய மாவட்டங்கள் நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கப்படுமென்றும் இது குறித்து இப்போது மாநில அரசு பரிசிலனை செய்துவருகிறதென்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார். (இ)

எனது இந்திய விஜயத்தால்

# ரஷ்ய பாரத நல்லுறவு மேலும் பலமடையும்

## சோவியத் அதிபர் பெருமிதம்

தாஷ்கண்ட், டிச. 8

இந்திய-சோவியத் நல்லுறவை தமது இந்திய விஜயம் மேலும் பலப்படுத்துமென்று சோவியத் அதிபர் திரு லியோனிஸ்ட் பிரஷ்னேவ் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவிலிருந்து இந்தியா புறப்பட்ட திரு. பிரஷ்னேவ் தாஷ்கண்ட் விமான நிலையத்தில் நிருபர்களிடையே பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சோவியத்யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையில் தமது இந்தியப் பயணம் மிகவும் முக்கியமான நடவடிக்கை என்றும் திரு. பிரஷ்னேவ் தெரிவித்துள்ளார். (இ)

# கலைப் பிரிவு நூல்கள் இல்லை

(திருகோணமலை)

திருகோணமலை பொதுநூலகத்தில் கலைப்பிரிவுக்கோ, வர்த்தகப்பிரிவுக்கோ போதிய நூல்கள் இல்லாதிருப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும் கலைப் பிரிவு பயிலும்மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவியல், பொருளியல், அரசியல் மற்றும் க. பொ. த. உயர்தரம் கலைப்பிரிவுக்கு வேண்டிய பாட நூல்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளன. (கு)

பாகிஸ்தானுக்கு பாடம்புகட்டுவதுபற்றிய

மொரார்ஜியின் கூற்று

# வாஜ்பாய், பஹுகுணுவுக்கு தகவல் எதுவும் தெரியாதாம்

புதுடில்லி, டிச. 8

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறி வருவது போல் ஜனதாகட்சி ஆட்சியில் பாகிஸ்தானுக்குப் பாடம் புகட்டவேண்டுமென்று சோவியத்யூனியன் இந்தியாவிடம் கேட்டுள்ளதா என்பது பற்றிய தகவல் எதுவும் எனக்குத் தெரியாது

இவ்வாறு பாரதிய ஜனதா கட்சித்தலைவர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

ஜனதா ஆட்சியில் திரு. வாஜ்பாய் வெளியுறவுஅமைச்சராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

திரு. தேசாயின் இக்கூற்றுப் பற்றித் தமக்கும் எதுவும் தெரியாதென்று ஜனதா அமைச்சரவையில் அங்கம் வகித்த திரு. திரு. எச் எம். பஹுகுணுவும் தெரிவித்துள்ளார். (இ)

# காவலூரில் நவீன சந்தை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டு வரும் நவீனசந்தைக் கட்டிடத்தின் கட்டிட வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்றுவருகின்றன. முதற் கட்டவேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து இரண்டாவது கட்டவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மேற்பார்வையில் நடைபெற்றுவரும் இவ்வேலைகளுக்கான நிதியை ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஒதுக்கியுள்ளார். (கு)

"மட்டக்களப்பு

# ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை முன்னேற்ற ஒத்துழைப்பேன்

## புதிய அதிபர் உறுதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சகல துறைகளிலும் முன்னேற்றமடைய என்னால் இயன்றளவு சகல பணிகளையும் வழங்குவேன்.

இவ்வாறு மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவ மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி இறுதி நாள் விருந்துபசார வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய புதிய அதிபரான திரு. க. புலேந்திரன் தெரிவித்தார்.

மாணவ மன்றத்தின் தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்; இக் கல்லூரி பல துறைகளிலில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக விடுதி வசதியின்மை வகுப்பறை பற்றுக்குறை என்பன எதிர்காலத்தில் பெரும் பிரச்சனையாக தோன்றக்கூடும். இதனை தீர்ப்பதற்காக தற்காலிக நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளேன்.

"இருப்பினும் நிரந்தர தீர்விற்காக இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் எடுக்கின்ற சகல கருமங்களுக்கும் என்னால் இயன்ற சகல உதவிகளையும் வழங்குவேன்" என்றார்.

மற்றும் விரிவுரையாளர் திரு க. ஆ. சுந்தரலிங்கம், ஜனாப். சுளிஸ், திரு. வே. திரு. வே. கிருஸ்ணபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (கு)

"கிறிஸ்தவர்களுக்கு

# அட்வெந்து காலம் புனிதமானது"

(அரியாலை)

"கிறிஸ்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருப்பது வேதனைக்குரியதாகும். திருச்சபைகள் அட்வெந்து காலத்தை கிறிஸ்துவின் வருகையின் காலம் எனக் கொள்ளுகின்றன. மனித குலத்துக்காகப் பாடுபட்டு இரத்தம் சிந்தி குருசு மரத்தில் மரித்த யேசு என்றும் எம்மத்தியில் இருக்கிறார். அவரின் பிறப்பைக் குறிக்கும் அட்வெந்து காலம் கிறிஸ்தவர்களுக்குப் புனித காலமாகும்.

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட்திரு. சாம். டி. ஹோர் சிங்டன் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் "இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சர்வாதிகாரியான ஹிட்லரினதும் ஜெர்மனி நாட்டினதும் தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாமல் தோல்விகண்ட நிலையில் இருந்த பிரித்தானிய சாம்ராஜ்யம்மும் அதனோடு இணைந்த ஏனைய நாடுகளும் வெற்றியையே குறிக்கோளாகக் கொண்டு இறுதிவரை போரிட்டன. போரை வழிநடத்திச் சென்ற பிரித்தானிய சாம்ராஜ்ய பிரதம மந்திரி வின்சன் சர்ச்சில் வெற்றியே எமது இலட்சியம் என்று கொள்ளும்படி தமது படைவீரருக்கு அடிக்கடி கூறி வருவார்.

இதைப்போல கிறிஸ்தவர்களாகிய எமது நாளாந்த சீவியம் கிறிஸ்து வெற்றியை முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும்" என்றார்.

# மலிவு விலையில் விறகு விற்பனை

(மன்னார்)

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மன்னார் பட்டினசபை எல்லைக்குள் விறகு விற்பனை நிலையம் ஒன்றினைத் திறந்து வைத்துள்ளது.

மன்னார் பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. தீவகலாலின் உத்தரவின் பேரில் திறந்துவைக்கப்பட்டுள்ள விறகு விற்டனைநிலையம் பொதுமக்களுக்கு மலிவான விலையில் விறகுகளை விற்பனை செய்து வருகிறது. (ஈ)

# இந்தியாவில் அபாயமும் பிரச்னையும் இருக்கவேசெய்கிறது

## குற்றச்சாட்டுகளுக்கு இந்திரா பதில்

புதுடில்லி, டிச. 8

இந்தியாவில் இன்று அபாயங்களும், பிரச்னைகளும் இருக்கத்தான் செய்கிறது ஆனால் அரசு அதனைக் கவனிக்காமல் இருக்கிறதென்ற எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திபுதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.



இந்த இரண்டுநாள் மாநாட்டின் இறுதி நாளன்று பேசிய திருமதி காந்தி மேலும் கூறியதாவது:

வகுப்பு ஒற்றுமையையும், விஞ்ஞான ரீதியிலான விவேகமான எண்ணங்களையும்நாட்டு மக்களிடையே பரப்பும் நடவடிக்கைகளில் எமது கட்சித் தொண்டர்கள் ஈடுபடவேண்டும்.

எந்த ஒரு பிரச்னையையும் நாம் எல்லோரும் தேசியப் பெருநோக்குடன் அணுகவேண்டும்.

அரசு இப்போது எதுவும் செய்யவில்லையென்று கூறுவது அர்த்தமற்றது. முன்னர் ஏற்பட்டிருந்த பிற்போக்குத்தன்மையை அரசு இப்போது நீக்கியுள்ளது.

விலைவாசிகளுக்கு இப்போது அதிகவிலை கோரப்படுகிறது. அவற்றுக்கு ஓரளவுக்கு மேல் விலை கொடுத்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துவிடும். (இ)

போர்த்துக்கலில் மீண்டும்

# ரமாலோ ஜனாதிபதி

லிஸ்பன், டிச. 8

போர்த்துக்கல் ஜனாதிபதியாக ஜெனரல் அன்ரோனியோ ரமாலோ மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் ஜெனரல் ரமாலோவுக்கு 57·4 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 90 வீதமானோர் தமது வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர் என்றும், அநேகர் கடந்த வியாழனன்று விமான விபத்தில் காலமான போர்த்துக்கல் பிரதமர் திரு. பிரான்சிஸ்கோ கார்னெய்ரோவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் [illegible] வாக்களிப்புக்குச் செல்லவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# பொதுசன நூல் நிலையம்

(மன்னார்)

மன்னார்-மாந்தை மேற்குக் கிராமசபையால் பொதுசன நூல்நிலையமொன்று திறந்து [illegible]

இந்நூல்நிலையத்தை மன்னார் எம். பி. திரு. பி எஸ் சூசைதாசன் திறந்து வைத்தார். இது மாந்தை மேற்கு கிராமசபையால் கிராமசபை முன்றலில் நிறுவப்பட்டுள்ளது.

# பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

73, 74ம் ஆண்டுகளில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சான்றிதழ்களை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(மன்னார் நிரு) (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருட்டுத்தொழிலாளர் போராட்டம்

### மணிவாக்கு

இவ்வுலகம் ஒரு சத்திரம், தர்மசாலை. இது உனது சொந்தஸ்தானமன்று. உனது பூர்வீக இருப்பிடம் பரம்தாமம். எனவே அதை நோக்கிச்செல்.

— சுவாமி சிவானந்தர்.

## நமது நோக்கு

### சமய வாழ்வும் மனிதஉரிமையும்

நாளை நாட்டின் பல பாகங்களிலும்மனிதஉரிமைகள் தினம் கொண்டாடப்படும்

இவ்வித கொண்டாட்டங்கள் வெறும்விழாவுடன் நின்றுவிடாமல் மனிதனின் மண்ணுலக வாழ்வை மலரவைகும் மனித உரிமைகள், அதற்கு அப்பாலும் மனிதனை உயர்த்திவிடும் வழியில் பயன்பட வேண்டும்.

தர்மிஷ்ட சமுதாயமென்பதே இன்றைய ஆட்சியின் குறிக்கோள் என்று அடிக்கடி நினைவூட்டப்படுகிறது. ஆத்மீக அடிப்படையில் மனித வாழ்வு அமைந்தாலன்றி அது சாத்தியமாகாது.

'அறஞ்செய விரும்பு' என்று மூன்று சொற்களில் ஔவையார் உருட்டிவிட்ட ஏளிகையே தர்மிஷ்டசமுதாயத்தின் முதல்படி; அது முக்கியபடி. தருமம் செய்வதற்கு ஆசை உண்டுபட்டால் மற்றெல்லாம் நிறைவேற்றப்படு மென்பதே மூதாட்டியின் முழு நம்பிக்கை.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தேவார அடியும் கடமையை முக்கியமாக வற்புறுத்துகின்றது.

சமுதாய வாழ்விலன்றி தனிமனிதனுக்கு உரிமைகள் பற்றிப்பேசுவது பொருத்தமற்றது. தருமஞ்செய்ய விரும்புவதும் கடமையிற் கண்ணுங்கவிருத்தலும் குடும்ப வாழ்வின் இலட்சியங்கள்.

ஔவையார் காலத்தையும் தேவார காலத்தையும் தாண்டி இன்று நாம் 21ம் நூற்றாண்டை நோக்கி நிற்கின்றோம். சமய வாழ்வு, சமூகவாழ்வு குடும்பவாழ்வு இவற்றில் நாம் காணும் மாற்றங்கள் இன்றைய சிறுவர்க்கு எவ்விதத்திலும் புரியாதவை.

நாம் குறிப்பிடும்மாற்றங்கள் பெரும்பாலும் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்டவை. இவை எல்லாம் மனிதனின் மண்ணுலக வளர்ச்சிக்கு உகந்தவை என்று சொல்வதற்கில்லை.

ஆயினும் விஞ்ஞானம் சமய வாழ்விற்கு முரண்பட்டதென்று ஐன்ஸ்டைன் போன்ற உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானிகள் கொள்ளவில்லை.

இந்நாட்டில் மக்கள் கடைப்பிடிக்கும் நாற்பெரும் சமயங்கள், அறத்தையும், கடமையையும் மனித வாழ்வின் இருபெரும் இலட்சியங்களாகக் கொள்வதில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. அதுவும் அன்பும் அறமும் இல்லற வாழ்க்கையில் செம்மையான குடும்ப வாழ்வில் பரிணமிக்கின்றன என்பது அவைகளின் முடிந்த முடிபு.

குடும்பம் எப்போ தோன்றிற்றோ, அப்போதே அரசும் தோன்றிற்று என்பது தற்கால அரசியலறிஞரின் துணிபு. அது அவ்வாறாயின் குடும்ப வாழ்வின் அமைப்புக்கும் அரசியல் ஆட்சி முறைக்கும் நெருங்கிய தொடர்பை நாம் இன்றும் காணமுடிகிறது.

தனிக் குடும்பம் மட்டுமல்ல; ஆட்சிக்குப்பாற்பட்ட மக்கள் சங்கங்கள் - தொழிற் சங்கங்கள், கலைக் கழகங்கள், நெறிக் கழகங்கள் - பல இன்றும் நாட்டில் உண்டு.

இவையெல்லாம் ஆத்மீக அடிப்படையில் உருவானவை என்பதை நாம் உணர்வதில்லை. இவற்றுள் தலைமை சிறந்த நிறுவனங்கள், நாட்டாட்சித் தலைமை சிறந்த நாடு போன்று பல அரிய சேவைகளில் ஈடுபடுகின்றன. இவை மனித உரிமைகளின் பெருங்காவலாளிகளென்பது மிகையாகாது.

சமுதாயத்திலே பலருடைய வாழ்க்கைக்குப் பொறுப்புள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தலைவர் எனப்படும் தகைமையுடையர். குடும்பத்தலைவர், தொழிற் சங்கத் தலைவர். கலைக்கழகத் தலைவர், கிராம முன்னேற்றத் தலைவர், சமயத்தலைவர் போன்றவர்கள் தலைமைப் பதவிக்கு உரித்தானவர். குடி தழுவிக் கோலோச்சும் மக்கள் ஆட்சியில் குடிகள் அத்தனை பேரும் ஆட்சித் தலைவரேயாவர்.

வள்ளுவர் கூறும் குடும்ப இலக்கணங்களையே எல்லாச் சமயங்களும் வற்புறுத்துகின்றன. ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, தொழில்முயற்றல், பொருளீட்டல் போன்ற பல அரும்பெரும் அடிப்படைக் குணங்கள் குடும்பத்திற்கு எவ்வளவு அவசியமோ, நாட்டாட்சிக்கும் அவ்வளவு அவசியம்.

அடக்குமுறை ஆட்சி எதுவானாலும் அதனை வெல்வதற்கு இந்த உண்மையை ஒவ்வொருவரும் உணர்வது இன்றியமையாதது.

தனி மனிதனும், தனிப்பட்ட நிறுவனங்களும் பொதுமக்களுக்கு இடும்பை விளைவிக்காத வகையில் இயங்கி வந்தால், மனித உரிமைகளை நாம் [illegible] வதற்கு அரசு இடமளிக்காதிருக்க முடியாது.

## ஒரு நோக்கு

கடந்த சில தினங்களாக சுருட்டுத் தொழிலாளர்கள் பலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதை யாழ் குடாநாட்டின் முக்கிய சில பகுதிகளில் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. ஒவ்வோர் ஆயிரம் சுருட்டுக்களை சுருட்டுவதற்கும் கூலியாக ரூபா 60க்கு மேல் வழங்கப்பட வேண்டுமென்பதே இவ்வேலை நிறுத்தம் மூலம் வெளிக்கொணரப்பட்ட முக்கிய கோரிக்கையாகும்.

சுருட்டுக் கைத்தொழில் குடாநாட்டின் பொருளாதார வாய்ப்புக்களின் பங்களிப்பில் முக்கியமான தொன்றாகக் காணப்படுகிறது. உழைக்கும் மக்களின் கணிசமானளவு மக்கள் இத்தொழில் மூலமே நாளாந்தம் தம் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்கின்றனர். சுமார் பன்னிராயிரம் தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன. இன்று இத்தொழிலில் நிலவுகின்ற கூலி உயர்வுப் போராட்டம் எத்தன்மையிலான அம்சங்களைக் கொண்டுள்ளன என்பதை நகரவாசிகள் பலர் அறிந்திருக்க நியாயமில்லை. கிராமியச் சூழலுடன் முற்றாக இணைக்கப்பட்டு இத்தொழில் இயங்குவதே இதற்கான காரணமாகும்.

தேசிய மட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் பொருட்களின் விலையுயர்வின் விளைவாக நாட்டில் பல வேலைநிறுத்தங்கள் கூலி உயர்வின் சாயலாக இடம் பெற்று வந்துள்ளன. பல்வேறு காலகட்டங்களில் சுருட்டுக் கைத்தொழிலிலும் இத்தன்மையினை நாம் காணக் கூடியதாயிருந்தது. உண்மையில் இவ்வேலை நிறுத்தங்களினால் சுருட்டுத்தொழிலின் கூலியில் உயர்வு இடம் பெற்றது. எனினும் நிர்ணயிக்கப்பட்டிருந்த கூலி உயர்வுக்கு குறைவான அளவே இத்தொழிலாளரினால் பெற முடிந்தது. ஒவ்வோர் ஆயிரம் சுருட்டுகளுக்கும் பல்வேறு காலகட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட கூலியின் அளவையும் வழங்கப்பட்டிருந்த கூலியின் அளவையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. கடந்த 15 வருடகாலத்துள் 4 மடங்கு கூலி உயர்வு இடம் பெற்றுள்ளதை இதன் மூலம் நாம் அறியமுடிகின்றது.

ஆண்டு, நிர்ணயிக்கப்பட்ட கூலி (ரூபா), வழங்கப்பட்ட கூலி (ரூபாக்களில்) என்பனமுறையே 64-ல்10, 10: 68-ல் 13, 12: 71-ல் 15, 14: 73-ல் 20, 18: 75-ல் 27/50, 23: 76-ல்: 32/50 27: 77-ல் 37/50, 32: 79-ல் 50, 40.

பயிற்றப்படாத தொழிலாளரைக் கொண்டு இத்தொழில் இயங்க முடியாதநிலை இருந்தும் கூட கூலி உயர்வுப் போராட்டத்தின் எதிர் பார்த்த இலக்கை அடைய முடியாத நிலைமையுள்ளது. மேலும் ஆரம்பகாலத்தில் நிர்ணயிக்கப்பட்ட கூலிக்கும் வழங்கப்பட்ட கூலிக்கும் இடையில் இருந்த வித்தியாசம் குறைவானதாகவும் இன்று இதன் இடைவெளி அகன்று வருவதையும் அட்டவணையிலிருந்து அவதானிக்க முடிகிறது. உதாரணமாக பார்க்கும் போது 1968, 70 காலத்தின் இவ் இடைவெளி ரூபா 1 ஆக இருந்து இன்று 10 ரூபாவுக்கு மேல் காணப்படுவது. சுலை தாத்தக்க அம்சமாகும் இத்தொழிலில் மேற்கூறப்பட்ட நிலைமைகள் உருவாகுவதற்கு தொழிலாளர்களின் தவறுதலான வழிநடத்தல்களும் இத்தொழிலின் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள சில பிரிக்க முடியாப்பிரச்சினைகளும் தொழிலில் உருவாகிய தொழிற் சங்கங்களின் குறைந்தளவிலான செயற்றிறனும் இன்னபிறவும் காரணங்களாக கொள்ள முடிகின்றது.

எல்லா வேலைநிறுத்த போராட்டங்களையும் எடுத்து நோக்கும்போது ஒருசாரார் வேலைநிறுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டவராகவும் மறுசாரார் வேலைக்கு செல்பவராகவும் செயற்படுவதை பொதுவாக நாம் அவதானிக்கலாம் ஆனால் சுருட்டுத்தொழிலாளர் வேலைநிறுத்த காலத்தில் ஒரு சிலரே மிகத்தீவிரமாக ஈடுபடுகின்றனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட மிதவாதிகளில் பலர் இரவு நேரங்களில் வேலையில் ஈடுபடுபவராக உள்ளனர். வேறு சிலர் தமது சொந்தத் தேவைக்கெனக் கூறித் தமது இல்லங்களிலேயே தொழில் செய்கின்றனர். தீவிரமாகப் பகலில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்கூட இரவில் தலைமறைவாக வேலைசெய்கின்றனர் என்ற குறைபாட்டை இத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களின் சம்பாஷணையிலிருந்து நாம் கேட்கக்கூடியதாகவுள்ளது. வேலை நிறுத்தகாலத்தில் தொழிலாளர்களிற்சிலர் சில்லறை வியாபாரம் போன்ற தொழில்களில் ஈடுபடுவதுமுண்டு. இத்தொழிலில் இயங்கும் கணிசமானபகுதியினர் விவசாயம் போன்ற தொழில்களுடன் தொடர்புபட்டவராக இருப்பதனால் போராட்டத்தில் தீவிரமாக இவர்கள் இயங்கமுடியாதது இயல்பானதொன்றேயாம்

இத்தொழிலை நடத்தும் முதலாளிக்கும், அவர் தொழிற்சாலையில் இயங்கும் தொழிலாளர்களுக்கும் ஏனைய தொழில்களில் உள்ளதுபோல வேறுபாடுகளைத் தெளிவாக இனங்காணமுடியாது வருமானத்தை எடுத்து நோக்கும் பொழுது முதலாளிகட்கும், தொழிலாளிகளுக்குமுள்ள வருமான வித்தியாசம் அதிகளவில் இல்லை. இக்காரணத்தால் என்னவோ இத்தொழிலைப் பொறுத்தவரை வர்க்கப் போராட்ட எண்ணங்கள் மிகக் குறைந்தளவாகக் காணப்படுகிறது. பெரும்பாலும் தொழில் நிலையங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் முதலாளிக்கு உறவினராகவோ, அல்லது நண்பராகவோ, அல்லது அயலவர்களாகவோ காணப்படுகின்றனர். எனவேதான் வேலை நிறுத்தக் காலங்களில் பல தொழிலாளர்கள் தீவிரமாகச் செயற்பட முடியாதுள்ளனர். மேலும் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கூலியிலும் குறைவாக முதலாளியிடம் முகத்துக்கஞ்சி வாங்கவேண்டியவராகவுள்ளனர். மற்றும் சுருட்டுத் தொழிலில் வயது முதிர்ந்த காலத்தில் உழைக்கும்பொழுது அவரின் தொழிற்றிறன் கைச்சோர்வின் காரணமாகக்குறைவதால் அவர் முதலாளியின் விசுவாசியாகவே விளங்க வேண்டுமென்பது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

இத்தொழிலைப் பொறுத்தவரை இருவேறுபட்ட தலைமையிலான தொழிற் சங்கங்கள் காணப்படுகின்றன. இவ்விரு வேறுபட்ட சங்கங்களும் நான்தான் நீதான் என தம்முள் சச்சரவு இட்டுக்கொண்டு இருக்கின்றன. மேலும் இத்தொழிலில் மிளிருகின்ற பிரச்சினைகள் யாவை, இப்பிரச்சினைகளை எந்தவகையில் தொழிலாளர்களுடன் மோதுகின்றன அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் யாவை என்பனவற்றைப்பற்றி ஆராய இத்தொழிற்சங்கங்கள் தவறியுள்ளன. வேலைநிறுத்தங்களினால் கூலியுயர்வுக்கு இத்தொழிற் சங்கங்களே நிலைக்களமாகச் செயற்பட்டது என்பதை எவரும் மறக்கமுடியாது, எனினும் ஒவ்வொரு கூலியுயர்வு காலத்திலும்குறித்தளவு பணத்தைத் தொழிலாளர்களிடமிருந்து இத்தொழிற்சங்கங்கள் சந்தாவாக அறவிட்டுச் செல்வதை இத்தொழிலாளர்களே ஒரு குறைபாடாகக்கூறி வருகின்றனர். மேலும் தொழிற்சங்கவாதிகள் பூரணமாக இத்தொழிலைப்பற்றித் தெரிந்தவர்கள் அல்ல எனப் பலதொழிலாளர்கள் குறைகூறுகின்றனர். 1980ம் ஆண்டு சுருட்டுத்தொழில் முதலாளிமார் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

தொகுத்து நோக்கும் போது தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் பொருட்களின் விலையுயர்வு சுருட்டுத் தொழிலாளரின் வாழ்க்கைச் செலவை உயர்த்துவதனால் அவர்களது கூலியுயர்வுப் போராட்டங்கள் நியாயபூர்வமானதே. எனினும் இத்தொழிலில் ஈடுபட்டவர்களின் தவறான செயற்பாடுகளும் இத்தொழிலில் இணைந்துள்ள பிரிக்கமுடியாதுள்ள பிரச்சினைகளும் கூலியுயர்வின் முழு அளவிலான பயனையும் இவர்களினால் பெறமுடிவதில்லை. இன்று 60 ரூபாகோரி வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளவர்கள் சில தினங்களுக்குள் 45,50 ரூபா கூலியுடன் வேலைக்குச் செல்வர். சிறைய திலிருந்து இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் பொருளாதாரப் பின்னணியும் அவர்கள் உடல்நிலையும் இந்நிலைக்கு அவர்களை உட்படுத்துகின்றது. குடாநாட்டில் வாழ்கின்ற 95 வீதமான தொழிலாளர்கள் ஆதரிக்கும் அரசியல் கட்சியின் பிரமுகர்கள்கூட இத்தொழிலாளர்களது பிரச்சினையில் அதிகளவு அக்கறை கொண்டிலர். இத்தொழிலாளர்களும் இது பற்றிச் சிந்தியாத விட்டமை விசேஷமான ஒன்றேயாம்.

**அ. சுபாஸ்கரன் பி. ஏ. (சிறப்பு)**

## மக்கள் கருத்து

### இந்த ஒழுங்கைகள் திருந்துமா?

எமது கிராம மக்களினதும் வாகனங்களினதும் போக்குவரத்துப் பாதையான வராகி கோவிலடி முதலாம் ஒழுங்கை கேணியடிச் சந்திவரை ஒரே வெள்ளமயமாகக் காட்சியளிக்கிறது. மழை பெய்தால் அந்நீர் வற்றுவதற்குக் கிட்டத்தட்ட ஒரு மாதம் செல்லும். பாதசாரிகளும், சைக்கிள்களும் அருகிலுள்ள தனியார் காணிகளூடாகப் போக்குவரத்துச் செய்கின்றனர். கார்களும் மற்றும் வாகனங்களும் மழைக்காலங்களில் இப்பாதையால் செல்ல முடியாமல் வேறு பாதைகளை நாடிச் செல்கின்றனர். நேர் பாதையால் வெள்ளத்தில் சென்றால் நடுவில் உள்ள கிடங்குகளில் விழவேண்டியதுதான். புதியவர்கள் பலர் அந்தக் கிடங்குகளில் எத்தனையோமுறை விழுந்து எழுந்து சென்றிருக்கிறார்கள்.

இரண்டாம் இப்பாதையால் செல்ல முடியாது மழை பெய்தால் போக்குவரத்துக்கு இடைஞ்சல். இவற்றை நிவர்த்தி செய்யும்பொருட்டு வீதி விளக்குகள் போட்டுப் பாதையையும் திருத்த கொக்குவில் கிராமசபை உடனடியாக நடவடிக்கை எடுத்து வரியிறுப்பாளர்களாகிய பொதுமக்களுக்கு நன்மை செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

**கணபதி நடராசா**

வராகி கோவிலடி,
கொக்குவில்.

0 0 0

கொக்குவில் பகுதியிலுள்ள சாதியின் பெயரிலமைந்த ஒழுங்கை போக்குவரத்துக்கு இடைஞ்சலான நிலையில் கடந்த சில காலமாக இருந்துவருகின்றது.

வீதியின் அருகிலுள்ள பாலம் கட்டுவதற்காகப் பறிக்கப்பட்ட கற்கள் முன்னர் சில காலம் கிடந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தது. இப்பொழுது வெட்டிய மண் பிட்டிகள் ரோட்டில் குவிக்கப்பட்டு இருப்பதினால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. வீதியில் போதிய மின் வசதியும் இல்லாமையினால் இது போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரிதும் கஷ்டம் அடைகின்றார்கள்.

**நா. நவரத்தினராசா**

கொண்டாவில்

### யாருடையது?

யாழ். மெயின் வீதியிலுள்ள 'புல்பா ரயர் வேக்ஸ்' நிறுவனத்திற்கு முன்னால் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் காப்புறுதிப் பத்திரம் வாகன உத்தரவுப்பத்திரம் ஆகியன எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாடசாலை

# உதைபந்தாட்டம்: மீண்டும் யூனியன் சம்பியன்

## 5-வது தடவை வெற்றிக்கிண்ணம் சுவீகரிப்பு

(நமது நிருபர் எம். ஜெகநாதன்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 1ம் பிரிவு சாம்பியன் விருதை இவ்வருடம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியே சுவீகரித்துக் கொண்டது. இவ்வருடத்துடன் தொடர்ந்து மூன்றுவருடங்கள் சாம்பியன் விருதைப் பெற்றுக் கொண்டுள்ள பெருமையை இக்கல்லூரி பெறுகிறது. நேற்றுமுன் தினம் நடைபெற்ற சாமபியன் போட்டியில்கிடைத்த விருதுடன் யூனியன் கல்லூரிபெறு 5-வது சாம்பியன் விருது இதுவாகும்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையே இச்சாம்பியன் போட்டி நடைபெற்றது. போட்டியின் ஆரம்பத்தில் இருந்த விறுவிறுப்பை முடிவு நேரத்தில் காண முடியவில்லை.

இடை வேளையின் முன் நடேஸ்வராப் பகுதிக்குள்ளேயே பந்து இருந்தும் யூனியன்கல்லூரி கோல் போடும் சந்தர்ப்பத்தைபலதடவை தவறவிட்டுவிட்டது. எனினும் யூனியன் கல்லூரி வீரர்கள் ஒவ்வொருவரும் தமதுபொறுப்பை உணர்ந்து நன்ருக விளையாடினர். யூனியன் பின் அணி வீரர்கள் மிகவும் தீவிரமுடன் விளையாடினர். கோல் எதுவும் போடாத நிலையில் இடைவேளை காடுக்கப்பட்டது.

இடைவேளை தொடங்கி 8வது நிமிடத்தில் யூனியன் கல்லூரி முன்னணி வீரர் எஸ். நந்தகுமார் மிகவும் வேகமாக கோல் 1றைப்போட்டுக்கொண்டார். எதிர்க் கோஷ்டியினரின் தீவிரமான தடுப்புக்கு மத்தியில் போட்டுக் கொண்ட இக்கோல் நந்தனின் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

ரசிகர்கள் எதிர்பார்த்தபடி இக்கோலின் பின் போட்டி சூடு பிடித்தது. இருதரப்பினரும் விட்டுக்கொடுக்காது விளையாடினர். சில நிமிடங்களில் மிகவும் தனிமையாகக் கிடைத்த பந்தை நடேஸ்வரா முன்னணி வீரர் எம், யோகநாதன் நல்ல முறையிலும் விரைவாகவும் எடுத்துச் சென்று கோல் போடும் சமயத்தில் எதிர்தரப்பினரின் குறுக்கீட்டால்தடைப் பட்டுவிட்டது.

நடேஸ்வரா வீரர்கள் கோல் போடும் சந்தர்ப்பம் பல இருந்தும் அவற்றைச் சரியாகப்பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதற்கு யூனியன் வீரர்களின் தீவிர ஆட்டமே காரணமாகும்.

எனினும் ஒரு இறுதிப் போட்டியைப் பார்க்கும் மனப்பாங்கு ரசிகர்களுக்குஉண்டாகவில்லை அந்த அளவுக்கு போட்டி சோபை இழந்தே காணப்பட்டது. போட்டியில் 1—0 கோல்கணக்கில் யூனியன் கல்லூரி வெற்றி பெறுக்கொண்டது. நடேஸ்வராக்கல்லூரி 2-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இருகல்லூரிகளும் காங்கேசன்துறைத் தொகுதியில் அமைந்ததுடன் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவையுமாகும்.

நடேஸ்வராக் கல்லூரிக் கோஷ்டிக்கு எம். யோகரத்தினமும் யூனியன் கல்லூரிக் கோஷ்டிக்கு கே. சுதாகரும் தலைமை தாங்கினர். கோஷ்களின் பொறுப்பாசிரியர்களாக யூனியனுக்கு திரு. வீ. பாலசிங்கமும், நடேஸ்வராவுக்கு திரு. என். நவரத்தினராசாவும் இருந்தனர்.

நடேஸ்வராக் கோஷ்டியில் ரி. யோகரத்தினம் பி. தர்மகுலராஜா, என். ரவிந்திரன் ஆகியோரும் யூனியன் கோஷ்டியில் கே. கோபாலப்பிள்ளை, எஸ். நந்தகுமார், கே. சுதாகர், என். விஜேதன் ஆகியோரும் நன்ருக விளையாடினர்.

போட்டியைத் தொடக்குவதற்கு மத்தியஸ்தரினுல் வழங்கப்பட்ட அதிர்ஷ்ட பக்கமும் யூனியன் கல்லூரிக்கே கிடைத்தது. இதனுல் நடேஸ்வரா ஆட்டத்தை ஆரம்பித்தது. மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இச்சாம்பியன் போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. ஆர். பகேந்திரனும் உதவியாளர்களாக திரு. வி. சணேசலிங்கம் திரு. ஏ. கமலநாதன் ஆகியோரும் கடமையாற்றினர்.

இவ்விறுதிப் போட்டியை பெருந்திரளான மக்கள் கண்டு களித்தனர். மைதான ஒழுங்கு நன்ருகச் செய்யப்பட்டிருந்தது. ரசிகர்கள் கட்டிடங்கள் வீடுகள், மதில்கள், வேலிகள் மரங்களிலும் இருந்து பார்த்தனர் பார்வையாளர்கள் இருந்த மரக்கிளை ஒன்று முறிந்ததனுல் ஆபத்து ஏதும் நிகழவில்லை. பாடசாலை ஓடு உடைந்து விழுந்ததனுல் பார்வையாளர் ஒருவரின் மண்டை பலத்த காயத்துக்குள்ளானது.

### 3-ம் இடத்தெரிவு

3-ம் இடத்தெரிவுக்கான போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் போட்டியிடவிருந்ததாயினும் வசாவிளான் வித்தியாலய கோஷ்டி சமூகமளிக்காத காரணத்தால் இந்துக் கல்லூரிக்கு வெற்றி கொடுக்கப்பட்டது. இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி 3-ம் இடத்தைப் பெறுகிறது. இப்போட்டி நடைபெருதது ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றமாகவே காணப்பட்டது.

இவ் விறுதிப் போட்டிக்கும் பரிசளிப்பு விழாவுக்குமான பூர்வாங்க ஏற்பாடுகளை சங்கத்தின் பொதுச்செயலாளர் காப்டன் எஸ். சோமசுந்தரமும் 'உதைபந்தாட்ட' செயலாளர் திரு. கே. எம் எஸ். ஹமீட்டும் செய்திருந்தனர் விழாவினதும் போட்டியினதும் முக்கிய அறிவிப்பாளராக ஆசிரியர் தேவை கலந்து கொண்டார். (ஒ)




(கொழும்பு)

புத்தளத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 813-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு
**11 D 0233**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**22 F 0278**
ரூபா 40,000

மூன்ருவது பரிசு
**12 B 0141**
ரூபா 10,000

ரூபா 1,912 சதம் 50 கொண்ட 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | A | 0498 | 29 | A | 0621 |
| 34 | A | 0334 | 06 | B | 0212 |
| 10 | B | 0756 | 15 | B | 0568 |
| 15 | B | 0640 | 21 | B | 0758 |
| 14 | C | 0317 | 20 | D | 0164 |
| 35 | D | 0029 | 15 | E | 0219 |
| 20 | E | 0904 | 09 | F | 069 |
| 21 | F | 0064 | 26 | F | 0048 |
| 32 | F | 0514 | 35 | F | 0730 |
| 02 | G | 0665 | 03 | C | 0736 |
| 09 | G | 0205 | 11 | G | 0239 |
| 23 | G | 0760 | 26 | G | 0303 |
| 27 | G | 0018 | 14 | H | 0445 |
| 15 | H | 0432 | 06 | I | 0298 |
| 12 | J | 0083 | 26 | J | 044[illegible] |
| 19 | J | 0704 | 35 | J | 0881 |
| 25 | J | 9885 | 31 | J | 0597 |
| 24 | J | 0238 | 03 | K | 0977 |
| 19 | K | 0257 | 29 | K | 0768 |
| 02 | L | 0503 | 04 | L | 0721 |
| 09 | L | 0276 | 18 | L | 0513 |
| 21 | L | 0446 | 27 | L | 0876 |
| 02 | M | 0287 | 05 | M | 0764 |
| 19 | M | 0009 | 19 | M | 0162 |
| 25 | M | 0492 | 30 | M | 0780 |
| 32 | M | 0433 | 01 | N | 0868 |
| 21 | N | 0211 | 24 | N | 0[illegible]92 |
| 34 | N | 0959 | 28 | O | 0833 |
| 02 | P | 0534 | 10 | P | 0241 |
| 16 | P | 0416 | 19 | P | 0287 |
| 21 | P | 0593 | 23 | P | 0487 |
| 32 | P | 0049 | 03 | Q | 0883 |
| 09 | Q | 0627 | 12 | Q | 06[illegible]3 |
| 20 | Q | 0393 | 09 | R | 0642 |
| 28 | S | 0876 | 30 | S | 0646 |
| 06 | T | 0030 | 21 | T | 0654 |
| 22 | T | 0246 | 22 | T | 0719 |
| 06 | U | 0484 | 17 | U | 0061 |
| 18 | U | 0539 | 19 | U | 0354 |
| 13 | V | 0012 | 19 | V | 0268 |
| 29 | V | 0799 | 32 | V | 0421 |
| 02 | W | 0555 | 01 | W | [illegible]903 |
| 04 | W | [illegible] | 2[illegible] | W | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible]9 |
| 34 | W | 0706 | 10 | X | 0856 |
| 24 | X | 0159 | 01 | Y | 0129 |
| 11 | Y | 0022 | 12 | Y | 0883 |
| 15 | Y | 0339 | 32 | Y | 0702 |
| 02 | Z | 0762 | 09 | Z | 0612 |
| 17 | Z | 0360 | 27 | Z | 0455 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

ஆசிரியர்களின் சம்பளம்

# அடுத்த மாதத்திலிருந்து ஒழுங்காகக் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் அடுத்த மாதம் முதல் ஒழுங்காகக் கிடைக்கவுள்ளது. கடந்த காலங்களில் வழங்கப்படாமலிருந்த சம்பளப் பாக்கிப் பணமும் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் துரிதமாக மேற்கொண்டுவருகின்ருர்

பிரஸ்தாப ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகளில் சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

வேலை நிறுத்தத்தின் மூலம் வேலையிழந்த கல்வித் திணைக்கள லிகிதர்களின் வெற்றிடங்களால் சம்பளப் பட்டியல்கள் தயாரிப்பதில் தாமதம் இருந்து வந்தது இதனுல் ஆசிரியர்கள் தமது சம்பளத்தைப் பெறமுடியாதிருந்துவந்தது.

ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல் வேலைகள் பூர்த்தியானதும் அடுத்த மாதம் முதல் வழக்கம்போல் முழுச் சம்பளமும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மத்திய போக்குவரத்துச்சபை

# ஊழியர்க்கு இம்மாதம் முதல் மிகைஊதியம் வழங்கப்படும்

(நெல்லியடி)

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் ஊழியர்களுக்கு இம்மாதத்திலிருந்து மிகை ஊதியம்வழங்கும் திட்டமொன்றை அமுல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்துச்சபையின் செயலாற்றுப்பகுதி எடுத்து வரும் இநநடவடிக்கை காரணமாக சாரதிகள், நடத்துனர்கள், பொறியல் பிரிவு ஊழியர்கள் பெறுப்பதிகாரிகள் உட்பட மற்றைய நிர்வாக உத்தியோகத்தர்களுமாக சுமார் 64 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இதனுல் நன்மை பெறவுள்ளார்கள்.

இம்மிகை ஊதியம் வழங்கும் திட்டத்தின் கீழ்வாராந்த லீவுகள் தவிர்ந்த ஏனைய லீவுகளைப் பெருத ஊழியர்களுக்கு மாதாந்தம் தலா 80 ரூபா வழங்கப்படும் ஒருநாள் லீவு எடுத்தால் 60 ரூபாவும் இரண்டு நாளாயின் 50 ரூபாவும் மூன்று நாளாயின் 40 ரூபாவும் வழங்கப்படும் நான்கு நாளாயின் 30 ரூபா நான்கு நாட்களுக்கு மேல் லீவு எடுத்த ஊழியர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் எதுவித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் இம் மிகை ஊதியம் வழங்கும் திட்டத்தினை போல மற்ருெரு திட்டம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் பருத்தித்துறை டிப்போவில் கடந்தஒரு சில மாதங்களாக பரீட்சிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## "கிறிஸ்மஸ் தினத்தன்று ஒருநேர உணவைஏழைகட்கு கொடுத்து உதவுங்கள்"

### நீக்லஸ் அடிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"கிறிஸ்மஸ் தினத்தன்று ஒருநேரஉணவை அனுதைகள், ஏழைகள், சிறையிலுள்ளவர்களுக்கு கொடுத்து உதவமுன்வாருங்கள். அப்போது தான் கிறிஸ்மஸ் அர்த்தமுள்ளதாக அமையும்?".

இவ்வாறு யாழ். புனிதயுவானியார் ஆலயப்பங்குத்தந்தை அருட்திரு நீக்கிலஸ் அடிகள் தமக்கு பங்குமக்கள் சார்பாகப் பெயர் கொண்ட புனிதரின் திருநாள் அன்று அளிக்கப்பட்ட சேவைப் பாராட்டு விழாவில் பேசுகையில் கூறினுர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கிறிஸ்மஸ் தினத்தை அர்த்தமுள்ள தினமாக கருததுள்ள தினமாக அனுஷ்டித்தாலே அத்தினத்தின் புனிதம் உணரப்படும். அதைவிடுத்து கேளிக்கை தினமாக அதனைக் கொண்டாடி மகிழ்வது மாற்றப்படல் வேண்டும்" என்ருர். இவ்விழாவில் அடிகளின் சேவையைப் பாராட்டி திரு. அமிர்தநாயகம், திருமதி ரேஸ்சபாரெட்ணம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். (கி)

## ஊழியர்க்கு போனஸ்

(கொழும்பு)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும், வருடாந்த போனஸ் பணம் இம்மாதம் 12ம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

ரூபா 218-75 சதம் போனஸாக வழங்கப்படவுள்ளபோதிலும், சம்பளமற்ற லீவில் வேலைக்கு வராதோர்க்கு நாளொன்றுக்கு ரூபா 2-50 கழிக்கப்பட்டு போனஸ் வழங்கப்படும். (நெல்-கு

## கலைவிழா

(பண்டத்தரிப்பு)

சட்டுடை கலைவாணி சிறுவர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா சட்டுடை சைவத் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இக்கலைவிழாவில் பிரதம அதிதியாக சட்டத்தரணி சி. இராசேந்திரம் கலந்துகொண்டார். சிறுவர் பாடசாலை ஆசிரியை செல்வி ச. ஜோகினி உட்படபலர் இவ்விழாவில் உரையாற்றினுர்கள். மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் இறுதியில் நடைபெற்றன. (கு)

## சமரசமாக தீர்க்க முடிவு

(பலாலி)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் பொதுமக்கள்அங்கத்துவம் கோரி செய்யப்பட்ட மனு தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி சமரசம் செய்து வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் அங்கத்தவர்களின் மனுக்களைப் பரிசீலிப்பதற்கான பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி பொதுமக்களின் அங்கத்துவத்தை அங்கீகரிக்க வைப்பதுடன் கூட்டத்திற்கு தானும் சமூகமளிக்க விருப்பதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் வட்டாரபொலிஸ்-பொது மக்கள் நல்லுறவுக் குழுக்கூட்டத்திலும் அங்கத்தவர் மனுக்கள் பற்றிய விடயம் பரிசீலிக்கப்பட்டு ஏற்ற நடவடிக்கைஎடுப்பதாகவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ஈ)

## பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(கொழும்பு)

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 17ந் திகதி மாலை கொழும்பு சதாம் வீதியிலுள்ள இலங்கை வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொதுக் கூட்டத்திற்கான தீர்மானங்களை அனுப்புவோர் செயலாளர், 14, நீயன்ட் தொடர்மாடி கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுவதுடன், புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

## ஒளி விழா

(மன்னர்)

பேசாலையில் ஒளி விழாவொன்று இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பேசாலைக்கிளை இயக்குநரும், பேசாலைக் கிராம சேவை அலுவலருமான திரு. ஜே. ஜெயச்சந்திரா தலைமையில் நடைபெற்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழினத்திற்கு எது நன்மையானதோ அதனைச் செய்வதுதான் எமது கடமை"

## மானிப்பாய் கருத்தரங்கில் 'அமிர்'

(பண்டத்தரிப்பு)

"எமது தமிழ்ப் பிரதேசங்களை எதிர்நோக்கும் முக்கிய பிரச்னையான சிங்கள ஊடுருவல்களைத் தடுத்து, எமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களை பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஒரு சாதனமாக அமையும் என்று கருதியே அதற்கு ஆதரவு வழங்கினேம். தமிழினத்திற்கு எது நன்மையோ அதைச் செய்வது தான் எமது கடமையாகும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மானிப்பாய் வரியிறுப்பாளர்கள் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. க. முத்துவேற்பிள்ளை தலைமையில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

"மாவட்ட அபிவிருத்திச் சபைகளினால் தமிழ் மக்களுக்கு நன்மையே" என்ற விடயம் பற்றி திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

### சிங்கள ஊடுருவல்

"இன்று எமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் பல்வேறு வழிகளில் சிங்கள ஊடுருவல்கள் நடைபெற்று வருகின்றன. அல்லை, கந்தளாய் போன்ற பகுதிகளில் ஏற்கனவே நடைபெற்ற சிங்களக்குடியேற்றங்களினால் எமது பிரதேசம் அபகரிக்கப்பட்டுள்ளது.

"இப்போது மன்னரில் வெளி மாகாணங்களிலிருந்து வந்து சிங்கள மீனவர்கள் நிலையாகத் தங்கியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் நிறுவி நிரந்தரமாக குடியேற்ற திட்டமிடப்படுகிறது. மட்டக்களப்பு, கல்குடா தொகுதிகளிலும் இதே நிலைமை இருந்து வருகிறது. நீர்ப்பாசனத் திட்டங்கள், கைத்தொழில் திட்டங்கள் என்ற பெயரில் சிங்கள மக்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரவழைக்கப்பட்டு இங்கு நிரந்தரமாக தங்கிவிடக்கூடிய ஆபத்துகளும் ஏற்பட்டுள்ளது.

### தடுக்கும்
### அதிகாரம் உண்டு

இந்த நிலையிலிருந்து ஊடுருவல்களை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான அதிகாரம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு இருக்கின்றது. நிலப்பாதுகாப்பு, குடியேற்றம் உட்பட சுமார் 15 துறைகளில் மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சபைகள் மூலம் எமது மாவட்ட எல்லைகள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அபிவிருத்தி வேலைகளை நாமே திட்டமிட்டு செயல்ப்படுத்தக்கூடிய அதிகாரம் எமக்குக் கிடைத்துள்ளது.

### தப்பபிப்பிராயம்
### நீங்கிவிட்டது

"மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நாங்கள் ஏற்றதையிட்டு ஏற்பட்ட தப்பான அபிப்பிராயங்கள் இன்று மக்கள் மத்தியில் தீர்ந்துவிட்டது. எமது நிலைமைகளை தமிழ் மக்கள் நன்கு புரிந்து - உணர்ந்து கொண்டிருக்கின்றனர். காலம், சந்தர்ப்பம் ஆராய்ந்து எதை எதை எப்போது செய்ய வேண்டுமோ அதை நாம் செய்வோம். எந்தவழியில் போனல் எமது மக்களை முன்னேற்றலாம், எது எமது இனத்திற்கு நன்மை பயக்குமோ அதை செய்வோம்.

### கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு

"மாவட்டஅபிவிருத்திச்சபைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த சிலரின் நிலை "கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு" என்பதுபோல ஆகிவிட்டது. எமக்கு அரசியலில் என்றும் எதிராக இருந்த சிலர், எம்முடன் சேர்ந்து நின்ற சிலர் இச்சபைகளை விமர்சித்ததைக் கண்டு "கொண்டவன் தூற்றினல் கண்டவன் தூற்றுவான்" என்பது போல தாமும் நடந்து கொள்கின்றனர். அதாவது கணவன் ஒருவன் தனது மனைவியை பகிரங்கமாகத் தூற்றினல் மற்றவர்களும் தூற்றுவார்கள் என்பதாகும். நாம் எந்தவிதமான பலனையும் கருதி இச்சபைகளை ஏற்கவில்லை இதைப் பெறுவதற்காக எதனையும் விட்டுக்கொடுக்கவில்லை. தமிழ் ஈழமே எமது இலட்சியமாகும்."

மாணிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் உரையாற்றுகையில்:-

"எந்த அரசாங்கம் பதவியிலிருந்தாலும் எமது தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி எமது கைகளிலேயே இருக்க வேண்டும் என்பதுவே ஆரம்ப காலம் தொடக்கம் தமிழரசுக் கட்சியினதும், தமிழர் விடுதலைக்கூட்டணியினதும் கொள்கையாகும். இதை ஏற்றதினல் எமது இலட்சியங்களை கைவிட்டுவிட்டோம் என்று கூறுவது விஷமத்தனமான பிரச்சாரமாகும். அபிவிருத்திகளை திட்டமிட்டுச் செய்யும் அதிகாரங்கள் சட்டவடிவில் எமக்கு இச்சபைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன" என்ருர்.

வரியிறுப்பாளர்கள் சங்கச் செயலாளர் சட்டத்தரணி அமிர்தன் இராஜகாரியர் நன்றி கூறினர். (கு)

## திருவெம்பாவை

(சித்தன்கேணி)

கலைநகர் கம்பம்புலோ ஆதி வைரவர் ஆலயத்தில் இம்மாதம் 13ம் திகதி தொடக்கம் திருவெம்பாவை வழமை போல் நடைபெறவிருக்கின்றது. (கு)

## "பிறிமா மா ஆலையில் உள்ளூர் வாசிகட்கு இடமில்லை"

(திருகோணமலை)

திருகோணமலையில் தற்பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் பிறிமா மா ஆலையில் பெரும்பாலும் வெளியூர் வாசிகளே வேலை செய்வதனல் உள்ளூர் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தகுதியும் திறமையும் உள்ள உள்ளூர் இளைஞர்கள் இருக்கும் பொழுதுவெளியூர் வாசிகளுக்கு இடமளிப்பது சம்பந்தமாக திருமலை எம் பி. திரு இராசம்பந்தன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது பிரதமர் அளித்த பதிலில் அதுதனியார் நிறுவனம் அரசுக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறினர்.

## வீடு வழங்க இன்று விசாரணை

(பண்டத்தரிப்பு)

கட்டுடை இடிகுண்டடி என்ற இடத்தில் சுய உதவித் திட்டத்தின்கீழ் நிறுவப்படவுள்ள 30 வீடுகளுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முக விசாரணை இன்று செவ்வாய்க்கிழமை வலி. தென்மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரத்தினம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் இந்த நேர்முகவிசாரணைகளை நடத்தி தகுதியுள்ளவர்களைத் தெரிவு செய்வார்கள். (கு)

## மீண்டும்பூஜை ஆரம்பம்

(உடுப்பிட்டி)

கரவெட்டி புனித பரலோக மாதா ஆலயத்தில் மீண்டும் பூசை, ஆராதனைகள் ஆரம்பமாகிவுள்ளன.

இத்தேவாலயத்தில் கடந்த மூன்று மாத காலமாக பூசைகள் எதுவும் நடைபெருமல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (கு)

# "ஆலயங்களில் போட்டிகள் தலை தூக்குவது கவலைக்குரியது"

## சிவாச்சிரம ஆண்டுவிழாவில் நீதிபதி திலகன் உரை

(சென்னசோணி)

"தனிப்பெருமையும் சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள காரைநகரில் உள்ள ஆலயங்களில் ஈழத்துச் சிதம்பரம் குறிப்பிடத்தக்கது. இந்த ஊரில் உள்ள ஆலயங்களில் ஏற்படும் போட்டி பூசல்களை நீதிமன்றத்துக்கு வராது தடுத்து வைப்பதில் இது போன்ற சிவாச்சிரமங்கள் அக்கறை காட்டவேண்டும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை மாவட்டநீதிபதி திரு. ரீ. கே. என். திலகன் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வடக்குவீதியில் அமைந்துள்ள காரைநகர் சிவாச்சிரமத்தின் இருபதாவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

சிவாச்சிரமத்தின் நிர்வாகியான திருமதி நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

"கோயில்களில் போட்டி, பூசல்கள் தலைதூக்குவது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். புனிதத்துவம் வாய்ந்த ஆலயங்களில் இவ்வாருன ஆச்சிரமங்கள் இருப்பது வரவேற்கப்படக்கூடியது. "போட்டி, பூசல்கள் தலைதூக்கவிடாமல் இந்த ஆச்சிரமம் செயற்பட வேண்டும்."

துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமதுரையில், "எம்முடைய வாழ்க்கையில் ஆண்டவனை ஆலயங்களில் கண்டு ஆத்ம திருப்தியடைவதுபோல நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் திருமுறைகளிலும் ஆண்டவனைக் கண்டு மனம் நிறைவுகொள்ளலாம். இந்தவகையில் காரைநகர் சிவாச்சிரம அடியார்கள் தமது இருபதாவது ஆண்டு பூர்த்திவிழாவில் "திருமுறைத் தொகுப்பும் பக்திப்பாக்களும்" என்ற நூலை வெளியிட்டமையை அறிந்து அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்" என்ருர்.

முத்தமிழ் வித்தகி நல்லபிள்ளை நாகமுத்து, சலாநிதி வே. இராமகிருஷ்ணன் உட்பட மற்றும்பலர் உரையாற்றினர். வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா "பக்தநந்தனர்" என்ற கதாகாலஷேபம் நிகழ்த்தினர். சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் நன்றிகூறினர். (கு)

## கடல் அரிப்பை தடுக்க மதில்கள்

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் உள்ள திருக்கடலூர், சல்லி, குச்சவெளி போன்றகடலோரப் பகுதிகளில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கடல் அரிப்பால் பாதிப்புற்ற பகுதிகளில் இப்போது திருகோணமலை உதவி அரசாங்க அதிபரின் பணிப்புரையின் பேரில் மதில் கட்டப்பட்டு வருகின்றது.

சென்ற வருட மாரிகாலத்தில் இப் பகுதிகள் கடல்அரிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. (கு)

## மன்னர் பட்டினம் சுத்தமாக்கப் படுகிறது

(மன்னர்)

மன்னர் பட்டினசபையின் வட்டாரங்களில் இருக்கும் அசுத்தநீர் செல்லும் கான்கள் யாவும் செப்பனிடப்பட்டுவருகின்றன. அத்துடன் மன்னர் பட்டினத்தைச் சுத்தமாக வைத்திருக்க ஆதரவுதர வேண்டுமென மன்னர் பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. தீவசலால் பொதுமக்களை கேட்டுள்ளார்.

மன்னர் பட்டினத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து ஏலவிற்பனைமூலம் விற்பனைசெய்யப்படுமெனவும் விசேட ஆணையாளர் அறிவித்திருந்தார். இவ்வறிவித்தலின்பின் மன்னர் பட்டினத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொகை மிகவும் குறைந்துவருகிறது (ஈ)

# ஊர்காவற்றுறையில் 2-வது குடிநீர்த்திட்ட வேலைகள்

## 6 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படுகிறது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பட்டினத்தின் 2வது குடிநீர்த்திட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு தேவையான ஆறு லட்சம் ரூபாவில் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை இரண்டரை லட்சம் ரூபாவை கடனக வழங்கியுள்ளது. மற்றும் இரண்டு லட்சம் ரூபாவை அரசாங்கமும், ஒன்றரை லட்சம் ரூபாவை யூனிசேவ் நிறுவனமும்வழங்கியுள்ளன.

நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் மேற்பார்வையில் ஆரம்பித்துள்ள இவ் வேலைகள் 1981ம் ஆண்டு முற்பகுதியில் பூர்த்தியானதும் ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள வீடுகளுக்கும் குழாய் நீர் வழங்கப்படும். இதற்காக சுமார் 35000 கலன் நீர் கொள்வனவுள்ள தண்ணீர் தாங்கி ஒன்று ஊர்காவற்றுறை சுருவில் வீதியில் அமைக்கப்படுகிறது.

இத்திட்டம் பூர்த்தியானதும் ஊர்காவற்றுறைப் பட்டின மக்கள் அனுபவித்துவந்த தண்ணீர்ப் பிரச்சினை தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

# "பாடசாலை விழாக்கள் இறைபக்தியை ஏற்படுத்தும்"

(பலாலி)

"பாடசாலைகளில் நடத்தப்படும்விழாக்கள்மூலம்மாணவர்களிடையே சமயத்தொண்டையும், இறைபக்தியும் ஏற்படுத்த முடிகிறது இயேசுபாலன்பிறந்த [illegible] வானில் தோன்றிய ஒளியை மதிக்கும் நோக்கமாகவே இவ் ஒளிவிழா கிறீஸ்தவ மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் கொண்டாடப்படுகிறது".

இவ்வாறு ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலயத்தில் நடைபெற்ற "ஒளி விழா"விற்கு தலைமைவகித்துப் பேசிய அதிபர் திரு. திரு. ஏ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

[illegible]த்திபாலய அதிபர் தொடர்ந்து [illegible] பாலகனைச் சுமந்த தீர்க்கும் தேவ ஆட்டுக் குட்டியாக இறைவன் அருளால் பாலனை இயேசு கொடுக்கப்பட்டதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். தாழ்மையில் ஆண்டவன் சீவிக்கிருர் என்பதையும் பாலன் பிறப்பு உணர்த்துகிறது ஆகவே நாம் தாழ்மையுள்ளவர்களாக மாற வேண்டியது இவ் விழாவின் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் முக்கிய பாடமாகும்" என்ருர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்த மன்னர் வீடமைப்பு உதவி ஆணையாளர் திருஎம். இராசரத்தினம் அகால மரணமானதையிட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி வாரம்
**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-சரோஜாதேவி
**பாகப் பிரிவினை**

**SANTHI** (JAFFNA) DAILY 5 SHOWS
10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
★ CHARLES BRONSON ★ JIM BROWN
**"THE DIRTY DOZEN"**
ACTION PACKED COLOR MOVIE

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**வின்ஸர்** (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00 & 9-30 P.M.only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
**FEAR IS THE KEY**
Scope-Color Thrill & Action

**ராணி** (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-30, 7-00 & 9-30
EVELYNE KRAFT, LI H SIU-HFIEN
in
**MIGHTY HIMALAYANMAN**
AN EXPLOSIVE MOVE
திரைப்பட ரசிகர்களுக்கு ஓர் வேண்டுகோள் 12-ம் திகதிமுதல் புதிய தமிழ்ப்படம் திரையிடப்படவிருப்பதால், 11-ந் திகதிவரையே மேற்படி படம் காண்பிக்கப்படும்.

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

**ராஜா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30

★
ஜெய்கணேஷ், சுந்தரராஜன் நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)


# இன்றைய பலன்

சார்த்திகை மாதம்
24-ந் திகதி செவ்வாக்கிழமை
(9-12-80)

மேடம்: இதயத்தில்மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இன சனம் கூடும். புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

இடபம்: அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தோன்றும். வீணை சிந்தனையால் சோர்வு நிலை தென்படும்.

மிதுனம்: இல்லறத்தில் இனிமை தவழும். சஸ்திர வழியால் பெருமைக்கும் இடமுண்டு, காதல் சிட்டுக்களுக்கு இன்று கனிவான நாள்.

கடகம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம். பொருள் செலவும் உண்டு.

சிங்கம்: அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும். அற வழியில் ஆர்வம் பிறக்கும். தந்தைவழித் தனவரவிற்கும் இடமுண்டு. நல்ல நாள்.

கன்னி: தொழில்மாற்றம்அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம். இதன் மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கும். பேட்டி காண்பதற்கு ஏற்ற நாள்.

துலாம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத் தொழில்துறைகளை மனம் நாடும். சகோதர வழியால் நற்செய்தியும் வந்துசேரும்.

விருச்சிகம்: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் தோன்றும். நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

தனுசு: முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ளவும் நேரிடும்.

மகரம்: வாக்குவல்லமையால் நினைத்ததைச் சாதித்துக்கொள்வீர்கள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும். குடும்பத்தில் இன்பமான சூழ்நிலை தென்படும்.

கும்பம்: துன்பத்தின் ரேகைகள் படரும். தூக்கம் கெடும் எதிர்பார்த்ததில தடைகள் தோன்றும். வாகனச் சாரதிகளுக்கு நிதானம் வேண்டும்.

மீனம்: தாய்வழியால் நற்செய்தி வந்துசேரும். கல்வித்துறையில் முன்னேற்றம் காணப்படும். அறிஞர்களின் ஆதரவும் தாராளமாக கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-ஜெய்சங்கர்
**நீதிதேவன்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2 30
சிவாஜி - தேவிகா
**அன்னை இல்லம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
**ஞானக்குழந்தை**


# யாழ். பாடசாலை உதைபந்தாட்ட 2ம், 3ம் பிரிவுச் சாம்பியன்கள்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 2-ம், 3-ம் பிரிவில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

மூன்றும் பிரிவு 'ஆ' குழுவில் முறையே முதலாம் இடத்தை சென். ஜேம்ஸ். மத்தியமகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை அராலி இந்துக் கல்லூரியும் மூன்றும் இடத்தை இளவாலை மெய்கண்டான் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

மூன்றும் பிரிவு 'அ' குழுவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் இணையாக முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டன. கொக்குவில் இந்துக் கல்லூரி மூன்றும் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் பிரிவு குழு 'அ'வில் முதலாம் இடத்தை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை மானிப்பாய் இந்துக்கல்லூரியும், மூன்றும் இடத்தை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இரண்டாம் பிரிவுக் குழு 'ஆ'வில்; முதாம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், இரண்டாம் இடத்தை அராலி இந்துக்கல்லூரியும் மூன்றும் இடத்தை மட்டுவில் மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

# 'எதிர்கோஷ்டியின்முறையீடு நீதியாக ஆராயப்படவில்லை'

(பலாலி)

'யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 1-ம்பிரிவு அரையிறுதிப்போட்டியில் கலந்துகொண்ட கல்லூரி ஒன்றின் கோஷ்டியில் தகுதியற்ற வீரர் கலந்துகொண்டதை ஆட்சேபித்த எதிர்க் கோஷ்டியான வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கோரிக்கையைத் தகுந்தமுறையில் ஆராயாது சங்கத்தின் தலைவர் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பளித்தது முறையற்றது. இதற்கு நிவாரணம் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்''

இவ்வாறு வசாவிளான் மத்திய மகாவித்தியலயத்தின் பழைய மாணவர்கள், விளையாட்டுத்துறை அமைச்சருக்கு தந்தியொன்றை அனுப்பியுள்ளார்கள். அத்தந்தியில் மேலும குறிப்பிட்டுள்ளதாவது:-

'சங்கக் குழு எடுக்கவேண்டிய தீர்மானத்தை சங்கத்தின் தலைவர் திரு. எஸ் ரீ. சாறியே எடுத்துள்ளார். அத்துடன் தகுதியற்றவரின் மாதிரிக் கையொப்பத்தைக் குழுவின் முன்னிலையில் எடுக்காது தனியானதொரு இடத்திலேயே தலைவர் எடுத்துள்ளதுடன், குழுவினரின் அபிப்பிராயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. எனவே இதுவிடயத்தில் நீதி வழங்குவதுடன் மேலும் இதுபோன்ற தவறுகள் நிகழாதுநடவடிக்கை எடுக்கவும்' (கு)

# உதை பந்தாட்டப் போட்டி

(மன்னார்)

பேசாலை வெற்றிநாயகி ஆலயக் கேட்யத்துக்கான 9 பேர் அடங்கிய உதைபந்தாட்டப் போட்டி பேசாலையில் நடைபெறவுள்ளது. பேசாலை புனித ஸ்தாபக அருளப்பர் மன்றம் இப்போட்டியினை நடத்தவிருக்கின்றது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மன்றங்கள் தமது விண்ணப்பங்களை செயலாளர், புனித ஸ்தாபக அருளப்பர்மன்றம், பேசாலை என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர், (ஈ)

# ஞானோதயா சாம்பியன்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு அரசடி சனசமூகநிலையம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக்கழகம சாம்பியனாக வெற்றியீட்டி சிவாஸ் வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏக்கும் சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஞானோதயா விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் பிரதம அதிதியாக சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப் திகாரி திரு டி ஏச். பிரேமதாசா கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். (கு)

# மரக்கன்றுகள் விநியோகம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் தென்னங்கன்று, மாங்கன்று, எலுமிச்சை, தோடை, சஞ்சீவி, இப்பில் இப்பில் ஆகிய கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

இக்கன்றுகளை சங்கானை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலுள்ள மக்கள் பெற்றுக்கொண்டனர்.

# நாடக விழா

(மன்னார்)

மன்னார் கலைக்கோட்டம் நாடகவிழாவையும் நாடகப் போட்டி ஒன்றையும் அடுத்த வருடம் ஜனவரி நடுப்பகுதியில் நடத்தவுள்ளது.

இந்நாடகப்போட்டியில் முதற்பரிசாக 500 ரூபாவும் இரண்டாம் பரிசாக 300 ரூபாவும் மூன்றும் பரிசாக 200 ரூபாவும் வழங்கப்படவிருக்கிறது. இத்துடன் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இயக்குனர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவில் இலங்கை வானொலிக் கலைஞர் ஜனாப் அப்துல் ஹமீட், மற்றும் இலங்கை சினிமாப்பட முன்னணிக் கலைஞர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். (ஈ)


# பிரதமர் திறந்து வைப்பார்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமசபைக் கட்டிடத்திற்கு அருகாமையில் சுமார் ஒரு லட்சம் ரூபாசெலவில் புதிதாக நிறுவப்பட்ட பொதுசன நூல் நிலையத்தின் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன.

ஜனவரி 19-ந் திகதி யாழ். மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொள்ளும் பிரதமர் திரு ஆர். பிரேமதாச மூலம் இந்தநூல் நிலையத்தை திறந்து வைப்பதற்கான ஒழுங்குகளை மானிப்பாய் கிராம சபை விசேட ஆணையாளரும், யாழ் திட்டமிடல் அமுலாக்கல் பிரதிப் பணிப்பாளருமான திரு. எஸ். செல்வதாசன் மேற்கொண்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டில்கா
ரேடியோ அன் ரீ.வி
டெக்னீஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி

உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாயினும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

"சாவகச்சேரி மகளிர் கல்லூரியை

# மதக்கட்டுப்பாடின்றி குமாரசாமி நிறுவினர்"

- வி. என். நவரத்தினம்

(மட்டுவில்)

'சாவகச்சேரி முன்னாள் எம். பி அமரர் வே. குமாரசாமி, தனது முயற்சியால் இந்த மகளிர் கல்லூரியை அங்கு அமைத்தார். அவரின் புனித இலட்சியம் நிறைவேற்றப்படுவதன் மூலமே அவர் ஆத்மா சாந்தியடையும். இக் கல்லூரி ஓங்கிவளர மாணவர், ஆசிரியர் பெற்றோர் அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.'

இவ்வாறு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 80,000 ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறினர்.

கல்லூரி அதிபர் திருமதி குணேஸ்வரி பரராஜசிங்கம் தலைமையில்நடைபெற்ற இந்த விழாவில் திரு. நவரத்தினம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

'அமரர் குமாரசாமி எந்தப் புனித நோக்குடன் இதை நிறுவினரோ அந்த நோக்கு புனிதமானது ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஒரே கல்லூரியில் பயில்வது நன்மையா, தீமையா என்ற கேள்விக்குறிகள் எழுந்துள்ளன

'யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் கலாச்சாரத்திற்கிணங்க, ஆங்காங்கே மகளிர் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. மத அடிப்படையில் அவை கட்டி வளர்க்கப்பட்டன ஆனல் அமரர் குமாரசாமி மதக்கட்டுப்பாடற்ற முறையில் அதை நிறுவினர்.

'ஒரு கல்லூரியின் வளர்ச்சி' அதன் கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றின் மூலமே வளரவேண்டும். இதை எமது மாணவர், ஆசிரியர், பெற்றோர் நன்கு உணர்ந்து, இதைக் கட்டி வளர்க்க முன்வரவேண்டும்.

'1982-ம் ஆண்டு இலங்கையிலுள்ள ஏனைய கல்லூரிகளை விட இது பிரகாசமாக விளங்கும் என்பதை உறுதியுடன் கூறிவைக்க விரும்புகிறேன்' என்றார்.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் பேசுகையில் 'மாணவர் ஒரு சில மணிநேரமே கல்லூரியில் ஆசிரியர்களின் பொறுப்பிலுள்ளனர். மிகுதி நேரம் சமுதாயத்துடனும், பெற்றோருடனுமே காலத்தைச் செலவிடுகின்றார்கள் என்பதைப் பெற்றோர் மறந்துவிட முடியாது' என்றார்.

சாவகச்சேரி நகரபிதா திரு. எஸ். கே. திரவியநாயகம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர். (கு)

# பிரஷ்னேவுக்கு டில்லியில் அமோகவரவேற்பு

புதுடில்லி டிச, 3.

இந்தியாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி வந்த சோவியத் அதிபர் திரு. லியோனிஸ்ட் பிரஷ்னேவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

திரு. பிரஷ்னேவுக்கு மரியாதை வழங்கும் வகையில் முப்படை அணிவகுப்பும்அளிக்கப்பட்டது.

அவர் வந்து இறங்கியதும் 21 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. ஜனதிபதி திரு சஞ்சீவரெட்டி பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஆகியோர் திரு. பிரஷ்னேவை கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர் திரு பிரஷ்னேவ் ஜனதிபதி மாளிகைக்கு மோட்டார் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

விமான நிலையத்திலும் மோட்டார் பவனிசென்ற வீதியின் இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் கூடிநின்று சோவியத் ஜனதிபதியை வரவேற்றனர். (இ)

## யாழ்.மாநகர சிரமதானம் இன்று ஆரம்பம்

(பலாலி)

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் மன்றமும், யாழ்ப்பாண மாநகர சபையும் இணைந்து நடாத்தும் சிரமதானப்பணி ஒன்று இன்றுநடை பெறவிருக்கிறது இப் பணியில் மாநகர உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,ஊழியர்களுடன்தேசிய இளைஞர் சேவை மன்றங்களின் இளைஞர், யுவதிகளும், பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்வார்கள்.

யாழ்.மாநகர வளவில்ஆரம்பமாகும் இப் பணிதொடர்ந்து நகரின் பிற இடங்களுக்கும். விஸ்தரிக்கப்பட விருக்கிறது இச் சிரமதானப்பணியை மாநகர மேயர் திரு.இராஜாவிசுவநாதன் தொடக்கி வைப்பார். (ஈ)

## நிர்வாகிகள்

(மன்னார்)

எருக்கலம்பிட்டி - கிழக்கு பாலர் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச்சபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எம். சி, அமானுல்லா, துணைத் தலைவர்கள் எம். இப்ருகிம், வி. எஸ் ஏ. லத்தீப், செயலாளர் கே. எம். சரீபு, பொருளாளர்: ஜெஸ்மின்.

# ஆசிரியர் சங்க தூதுக்குழு: சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு இன்று கல்விச் சேவை ஆணைக்குழுவின் புதிய செயலாளரைச் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்துக் கலந்துரையாடும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் ஆகியோர் அடங்கிய இத் தூதுக்குழு இன்று காலை கல்வி அமைச்சில் கல்விச் சேவை ஆணைக்குழுவின் புதிய செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்தினவைச் சந்திக்கின்றது இச் சந்திப்பின்போது வருடாந்த பொது இடமாற்றம் ஆசிரிய நியமனங்கள், பதவி உயர்வுகள், கல்விச் சேவை ஆணைக்குழுவின் சீர்கேடுகள் பற்றி கலந்துரையாடப்படும்.

"வேலை கொள்வோர்

# ஊழியருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்"

## பாராளுமன்றத்தில் 'தர்மர்'

(கொழும்பு)

விடில்லாப்பிரச்னையினல் அவதியுறுபவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்வகையில் வேலை கொள்வோர் தத்தமது ஊழியர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி, தர்மலிங்கம் நேற்றுபாராளுமன்றத்தில் கூறினர்.

வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுமீதான குழுநிலைவிவாதத்தில் பேசிய திரு. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:- நகரப்பகுதிகளில் காணிகளின் விலை அதிகரித்துள்ளதால் அங்கு வீடுகளைக்கட்டுவதற்கு மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

"வீடில்லாப் பிரச்னையைத் தீர்க்க அரசு முன்வரவேண்டும் பிரதமராலேயே இப் பிரச்னையைத் தீர்க்க முடியும். அவரும் இப்பிரச்னையைத் தீர்க்க பல நடவடிக்கைகளைஎடுத்துள்ளார்.

கிராமப்பகுதிகளிலிருந்து வேலைதேடி பெருந்தொகையானேர் நகரப்பகுதிகளுக்கு வருவதனலேயே வீட்டுப் பிரச்னை தோன்றுகின்றது. எனவே கிராமப் பகுதிகளில் அரசு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் பட்சத்தில் இப்பிரச்னைகளை ஓரளவாவது தீர்க்க முடியும்.' (கு)

# மட்டு. மாவட்ட அமைச்சர் பொத்துவில் 'ரங்கா'?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராக புதிய தமிழ்ப் பெண் பாராளுமன்ற உறுப்பினரான பொத்துவில் தொகுதிஇரண்டாவது எம் பி. திருமதி ரங்கநாயகி பத்மநாதன் நியமனம் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் அமரர் எம். கனகரத்தினம் காலமானதைத் தொடர்ந்துபொத்துவில் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் பதவி, மட்டக்களப்பு மாவட்ட மந்திரி பதவி ஆகியன காலியாகி ஆறுமாத காலமாக வெற்றிடமாக இருந்தது

இதனல் இப்பகுதி அபிவிருத்திவிடயங்களில் சில தடங்கல்கள் காணப்பட்டன.

பொத்துவில் தொகுதி 2வது பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் தாமதமாக இடம் பெற்றாலும் மட்டக்களப்பு மாவட்ட மந்திரிப்பதவி காலகெதியில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு 2வது எம்.பி. ஜனப் பரூட் மீராலெப்பை உடனடியாக நியமனம் செய்யப்படுவார் எனப்பேசப்பட்டது

மன்னர் மாவட்ட அமைச்சர் ஜனப். எம். எச், மக்ரூப், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனப். ஏ. ஆர். எம். மன்சூர் ஆகிய இருவரில் ஒருவர் மட்டக்களப்பு மாவட்ட மந்திரியாக நியமனம் செய்யப்படுவார்களென்றும் ஜனப் பரீட் மீராலெப்பை நியமனம் செய்யப்படலாமென்றும் இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அமைச்சர்களுடன் நேருக்குநேர் மோதுவார் என்பதால் இவர் மட்டக்களப்பு மாவட்டமந்திரிப் பதவி வகிப்பதைச் சிலர் விரும்புகிறார்கள் இல்லை என்றும் பேசப்பட்டது.

அதேநேரத்தில் மட்டக்களப்பு மாவட்டமந்திரி பதவிக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் செய்யக் கூடாது எனப் பலர் சுட்டிக் காட்டியுமிருந்தனர்.

இந்நிலையில் அப்பதவிக்கு நியமிக்க தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிடம் இருக்கவில்லை

இப்போ ஒரு புதிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டிருப்பதால் அவர்தான் மட்டக்களப்பு மாவட்ட மந்திரியாக தெரிவுசெய்யப்படலாம் என்பதற்காகப் பின்வரும் காரணங்கள் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

● தற்போதைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது ஒருவர் நியமனம் செய்யப்படுவதாயின் நியமனம் கடந்த ஆறுமாத காலமாக வெற்றிடமாக இருந்திருக்கமாட்டாது.

● மட்டக்களப்பு தமிழ் மாவட்டமென்பதில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் தான் நியமனம் செய்யப்படுவார்.

● திருமதி ரங்கநாயகி பத்மநாதன் பொத்துவில் தொகுதி இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கை விடுத்த அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள், மந்திரிகள் மட்டக்களப்பு மாவட்ட மந்திரிப் பதவிக்கும் ஆதரவு வழங்குவார்கள்.

● காலஞ்சென்ற கனகரத்தினம் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர், மட்டகளப்பு மாவட்ட மந்திரி ஆகிய பதவிகள் இரண்டையும் ஒரே தடவையில் வகித்தபோது அவரின் அந்தரங்கக் காரியதரிசியாகப்பணிபுரிந்தவர். அவரின் திட்டங்களை நன்கு புரிந்து செயல்படக் கூடியவர்.

அடுத்த ஜனவரி ஆரம்பத்தில் இவர் மட்டக்களப்பு மாவட்ட மந்திரியாக நியமனம் செய்யப்படுவார் எனவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக திருமதி ரங்கநாயகி பத்மநாதனிடம் நமது நிருபர் கேட்டபோது "ஜனதிபதி ஜெயவர்த்தன இப்பதவியை வழங்கினல் அதனைப் பெற்றுக் கொண்டு மட்டுநகரின் அபிவிருத்திக்கு உழைப்பேன்', என்றார்.

பாராளுமன்றத்தில் முதல்த் தமிழ்ப் பெண்மணி என்ற புகழுக்குரிய திருமதி ரங்கா பத்மநாதன் முதல் தமிழ்ப் பெண் அமைச்சர் என்ற பெருமையையும் பெற்று தனக்கு மேலும் ஓர் புகழை பெறுவார் என்று கருதப்படுகிறது. (கு)

## ஸ்தூபி அடிக்கல் நாட்டுவிழா

(மட்டுவில்)

கல்வயல் ஸ்ரீவேதவனப்பிள்ளையார் ஆலய மூலஸ்தானம் புனரமைப்புச் சம்பந்தமான ஸ்தூபி அடிக்கல் நாட்டுவிழா இம்மாதம் 11ம் திகதி காலை நடைபெறும்.

## நாளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி) கையை உடனடியாக வெளியிடு, நாடற்றவர்களாக்கப்பட்டுள்ள இலட்சோப இலட்சம் மலையகத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கு, வேலை நீக்கம் செய்யப்பட்ட 40,000 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடு, தமிழ் மாவட்டங்களில் குடியேறியுள்ள மலையகத் தமிழர் மீது கைவையாதே, அத்தியாவசிய சேவைகள் சட்டத்தைத் திரும்பப் பெறு, தமிழீழத்தின் இறைமைக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் ஐ நா. சாசன அடிப்படையில் அங்கீகாரம் வழங்கு, தமிழீழத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்று. இராணுவ முகாம்களை மூடு, தமிழ்பேசும் மக்களின் நிலத்தை அபகரிக்காதே என்பது அடங்கிய கோரிக்கைகளை முன்வைத்து 3 மணிநேர அமைதிப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

## இன்று ஆரம்பமாகும் திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க பொதுசனத் தொடர்பு தகவல் நிலையமும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திரைப்பட சங்கமும் இணைந்து நடாத்தும் திரைப்படவிழா இன்று முதல் மூன்று நாட்களுக்கு யாழ். பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும். (வெ.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 The Eelanaadu ... டிசம்பர் 9ம் திகதி ... No. 4 ...
Grams Eelanaadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org